# றோயல் கல்லூரி – கொழும்பு 07

## இரண்டாம் தவணை - 2022

**வரலாறு II**

**03 மணித்தியாலம்**

**தரம் 11**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி I ல் முதலாம் வினா கட்டாயமானது
பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும்
பகுதி III ல் ஒரு வினாவுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

01)

அ) கீழே (i) குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் தரப்பட்ட இலங்கைப் படத்திலும் (II) ல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த இடங்களை தரப்பட்ட உலகப்படத்தில் குறித்துக் காட்டுக.

I. உடவளவை நீர்த்தேக்கம், இரணைமடுக்குளம், தெதுறு ஓயா, பராக்கிரம சமுத்திரம், மாகம, தம்பதெனியா, மன்னார், கதிர்காமம், கண்ணொருவ கும்புக்கன் ஓயா, களனி, ஜம்புகோளப்பட்டினம்

(12 புள்ளிகள்)

II. இத்தாலி, மதுரை, மலேசியா, போர்த்துக்கல், லண்டன், உரோம்

ஆ) கீழே A, B, C, D யில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்கு பொருத்தமான விடையினை உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. டிமுன்டோ என்னும் நூலை எழுதியவர்
B. ஆங்கிலேயர் இலங்கைக்கு வரும் போது கண்டியை ஆட்சி செய்தவன்
C. மறுமலர்ச்சி காலத்தில் கலைப்படைப்புக்கள் காரணமாக பிரசித்தி பெற்ற இத்தாலி நகரம்
D. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு பாதுகாப்பு வழங்கிய பிக்கு (4 புள்ளிகள்)

A, B யில் தரப்பட்டுள்ள படங்களினை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A)

1. ‘A’ யினால் காட்டப்பட்டுள்ள உருவின் பெயர் என்ன?
2. இது கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் என்ன?
3. இது எச்சமயப் பிரிவுக்கு உட்பட்டது?
4. இச்சமயப் பிரிவுக்குரியவர்கள் வருகை தந்த நாடு எது? (4 புள்ளிகள்)

B)

1. B யினால் காட்டப்படும் உரு எது?
2. இது காணப்படும் பிரதேசத்தினைப் பெயரிடுக.
3. இந்த நிர்மாணத்தினை அமைக்க பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் எது?
4. இந்நிர்மாணத்தின் ஊடாக எத்தொழினுட்பம் புலப்படுகிறது? (4 புள்ளிகள்)

02)

I. கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன் வரலாற்றுக் கால மனிதர் தொடர்பான தகவல்களுக்குரிய சுற்றாடல் வலயத்தினைப் பெயரிடுக.
   A. பெல்லன்பதிபெலஸ்ஸ
   B. பாகியன்கல
   C. பதிராஜவெல (3 புள்ளிகள்)

II. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று எழுதிய எழுத்தாளர்களால் எழுதப்பட்ட
   A. அரபு இலக்கியம்
   B. போர்த்துக்கேய இலக்கியம்
   C. ஒல்லாந்து இலக்கியம்
   D. ஆங்கில இலக்கியம்

   போன்றவற்றை முறையே குறிப்பிடுக.

III. கல்வெட்டுக்களின் முக்கியத்தும் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

IV. முன்வரலாற்றுக்கால மனிதனின் மரணக்கிரியைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளிகள்)

03)

I. முன்வரலாற்றுக்கால மனிதனால் உருவாக்கப்பட்ட குடியிருப்புக்களின் தன்மையினைக் குறிப்படுக. (3 புள்ளிகள்)

II. கீழே A, B, C, D யினால் காட்டப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களைப் பெயரிடுக.
   A. பனபெடிக
   B. படகரிக
   C. கொதுறுகேனா
   D. அசஅதெக

III. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் உணவுப் பழக்கங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. வசபமன்னன் பாரிய அளவிலான குளங்களை அமைத்ததற்கான இரண்டு காரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04)

I. கீழே தரப்பட்டுள்ளவற்றை நிர்மாணித்த மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
   A. மினிப்பே கால்வாய்
   B. யோதவாவி
   C. எலஹர கால்வாய் (3 புள்ளிகள்)

II. கீழே A, B, C, D யில் கேட்கப்பட்டுள்ளவற்றை அவதானித்து அவற்றிற்கான விடையினை ஒழுங்கு முறையில் எழுதுக.
   A. நிஸ்ஸங்க அளகேஸ்வரன் நிர்மாணித்த கோட்டை
   B. ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையின் முதல் மன்னன்
   C. உலர்வலயத்தில் ஆங்காங்கே உருவான சிறிய ஆட்சிப்பிரிவுகள்
   D. போர்த்துக்கேயர்களுக்கு தமது ஆட்சி உரிமையினை மரணசாசனத்தின மூலம் வழங்கிய மன்னன் (4 புள்ளிகள்)

III. மூன்றாம் விஜயபாகு மன்னனின் சேவைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அதில் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

IV. இரண்டாம் நகரமயமாக்கலின் போது பாரிய அளவிலான நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் உருப்பெறாமைக்கான மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05)

I. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர்கள் இலங்கைக்கு வருகை தரும் போது எமது நாட்டில் காணப்பட்ட ஆட்சிமையங்கள் மூன்றினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

II. கீழே தரப்பட்டுள்ள குளத்தின் உறுப்புக்களினால் ஆற்றப்படும் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
   A. குளக்கட்டு
   B. அலைதாங்கி
   C. வெளிவான்கதவு
   D. மடைக்கதவு (4 புள்ளிகள்)

III. இரண்டாம் நகரமயமாக்கலின் கட்டட நிர்மாணங்களில் காணக்கூடிய விசேட அம்சங்கள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

IV. முற்காலத்தில் எமது நாட்டில் வளர்ச்சியடைந்த வைத்தியசேவை காணப்பட்டதற்கான ஆதாரங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

06)

I. பிரித்தானியர்களால் மலைநாட்டில் பயிரிடப்பட்ட பெருந்தோட்டப் பயிர்க் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II. A – கி.பி 1619 இல் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆக்கிரமிப்பு செய்த போர்த்துக்கேய தளபதி
   B – டோனா கத்தரினா என்ற பெயரில் அழைக்கப்பட்ட மலைநாட்டு இளவரசி
   C – பெத்தன் கொட பூங்காவில் மூங்கில் முள்காலில் ஏறியதால் ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்த மன்னன்
   D – போர்த்துக்கேய தளபதியொருவரின் கவனயீனத்தில் ஏற்பட்ட துப்பாக்கி சூட்டினால் உயிரிழந்த மன்னன் (4 புள்ளிகள்)

III. 1848 ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்திற்கு காரணமான கோல்புறூக் சீர்த்திருத்தத்தின் செல்வாக்கு இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. 1815 மலைநாட்டு ஒப்பந்தத்தினால் மூன்று வருடங்கள் கடந்த பின் 1818 சுதந்திரப்போராட்டமொன்று ஏற்பட்டதற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

07)

I.

A. பிரதேசவாசிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானவை

B. கல்விகற்ற இலங்கையரின் பிரதிநிதியொருவர் தெரிவுசெய்யப்பட்டமை

C. இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்

மேலே குறிப்பிட்ட வேறுபாடுகளை மேற்கொண்ட அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II. கீழே A, B, C, D யில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அவதானித்து சரியான விடையினை எழுதுக.

A. இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பலநோக்கு அபிவிருத்தி திட்டமுறை

B. விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு நிதியுதவி வழங்கிய வெளிநாடு

C. 1961 ஆம் ஆண்டு சிறு கைத்தொழிலாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட உள்நாட்டு வங்கி

D. முதலாவது மகாவலி அபிவிருத்தி அமைச்சர் (4 புள்ளிகள்)

III. சுதந்திரத்தின் பின் எமது நாட்டு கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

IV. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை மூன்று விடயங்களின் கீழ் விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

08)

I. ஐரோப்பிய மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்த மூன்று விடயங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களைக் குறிப்பிடுக.

A. தேவாலயத்தின் ஆதிக்கம் தொடர்பாக ஆய்வு செய்த ஜேர்மன் நாட்டு பேராசிரியர்

B. மோனாலீசா என்ற உலக கலைப்படைப்பினை நிர்மானித்தவர்

C. மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான தகவலை முன் வைத்தவர்

D. தொலை நோக்கியை கண்டுப்பிடித்தவர் (4 புள்ளிகள்)

III. மறுமலர்ச்சியின் தாக்கத்தினால் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

IV. நாடுகாண்பயணங்களினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

09)

I. கைத்தொழிற்புரட்சி பரவலடைந்த ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

II. கைத்தொழிற் புரட்சி முதலில் பிரத்தானியாவில் ஆரம்பித்தமைக்கு பின்னணியாய் அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. கைத்தொழிற் புரட்சியினால் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினை இரண்டு உதாரணங்களின் ஊடாக விளக்குக. (5 புள்ளிகள்)

IV. கைத்தொழிற்புரட்சியினால் விவசாயத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)